# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி,சென்னை–600 032
தொலைபேசி எண்: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

முன்னிலை : **திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண். 104/ந/2025
நாள். 04.08.2025

திரு. S. அன்பழகன்,
துறையூர்,
திருச்சிராப்பள்ளி மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
துறையூர் நகராட்சி,
திருச்சிராப்பள்ளி மாவட்டம். – எதிர்மனுதாரர்

திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் (அஞ்சல் மற்றும் வட்டம்), முசிறி மெயின் ரோடு, அசோக் நகர், எண்.155, என்கிற முகவரியில் வசிக்கும் திரு. S. அன்பழகன், என்பவரது 13.03.2025 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 14.03.2025 அன்று பெறப்பட்டு, 104/ந/2025 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் (அஞ்சல் மற்றும் வட்டம்), முசிறி மெயின் ரோடு, அசோக் நகர், எண்.155, என்கிற முகவரியில் வசிக்கும் திரு. S. அன்பழகன், என்பவரது 13.03.2025 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

1) துறையூர் திருச்சி சாலையில் இயங்கி வரும் ஸ்ரீ குமரன் டெக்ஸ் மற்றும் ரெடி மேட்ஸ் அமைந்துள்ள கட்டிடம் சுமார் 12000 சதுர அடியில் அரசு கழிவு நீர் கால் வாயில் வாசல்படி வைத்து, வாகனம் நிறுத்துவதற்கென்று 1 அங்குலம் கூட இடம் ஏதும் விடாமல் கட்டிடத்தை சுற்றி 4 பக்கமும் 1 அங்குலம் கூட இடம் ஏதும் விடாமல் எதிர்பாராவிதமாக ஏதாவது தீ விபத்து ஏற்பட்டால் அதை தடுத்து அணைக்க முடியாத சூழ்நிலையில் இயங்கி வருகிறது. மேலும், துறையூர் பிரதான சாலையில் இது போன்று அடிப்படை பார்க்கிங் வசதி இல்லாமல் அதுவும் அரசு கழிவு நீர் கால்வாயில் வாசல்படிவைத்து சட்ட விரோதமாக செயல்படும் ஸ்ரீ குமரன் ஜவுளி கடையை 10 வருடங்களுக்கு மேலாக துறையூர் நகராட்சி ஆணையர் பதவியில் இருந்த ஒருவருமே கவனிக்கவில்லை என்பது வெட்கி தலைகுனிய வேண்டிய கீழ்தரமான செயல் என்பதை சுட்டி காட்டி உயர்நீதிமன்றத்தின் வழிகாட்டுதலை பின்பற்றி விதிமுறைகளை முற்றிலும் மீறி செயல்படும்

ஸ்ரீ குமரன் ஜவுளி கடை உள்ள கட்டிடத்தை இடித்து அகற்றுமாறு துறையூர் நகராட்சி ஆணையருக்கு 08.01.2025 இல் புகார் அனுப்பி, நகராட்சி ஆணையருக்கு அனுப்பிய புகாரின் நகலை தலைமை செயலாளர், நகராட்சி நிர்வாக இயக்குனர், மண்டல இயக்குனர் ஆகியோருக்கும் அனுப்பி அனைவரிடமிருந்தும் எனக்கு ஒப்புகை சான்று வந்துள்ளது.

நான் துறையூர் நகராட்சி ஆணையருக்கு 08.01.2025 இல் அனுப்பிய புகாரிலேயே நகராட்சி பகுதிகளில் உள்ள கட்டிடங்களை எவ்வாறு ஆய்வு செய்ய வேண்டும் என்று நகராட்சி நிர்வாக இயக்குனர் கூறிய அறிவுரைகளை கடந்த 10 வருடங்களுக்கு மேலாக பணியில் இருந்த அனைத்து ஆணையர்களும் பின்பற்றவில்லை என்பதை சுட்டிக்காட்டியதோடு, விதி மீறிய ஸ்ரீ குமரன் ஜவுளி கடை உள்ள கட்டிடத்தை 10 வருடங்களுக்கு மேலாக நகராட்சியின் எவ்வித கண்காணிப்பு, ஆய்விற்கு உள்ளாகாமல் இயங்கி வந்துள்ளதையும், உரிய நேரத்தில் ஆய்வு செய்திருந்தால் விதிமீறல்களை தடுத்திருக்கலாம் என்பதை சுட்டிகாட்டியதோடு கடந்த 10 வருடங்களுக்கு மேல் துறையூர் நகராட்சி ஆணையர் பதவியில் இருந்த அனைவருமே மக்கள் வரிப் பணத்தில் சம்பளம் பெற்றுக் கொண்டு எந்த வேலையும் செய்யாமல் வெட்டித்தனமாக சம்பளம் பெற்றுள்ளார்களோ அல்லது விதிமீறிய ஸ்ரீகுமரன் ஜவுளிகடை உரிமையாளரிடம் கையூட்டு பெற்று கடமை தவறி செயல்பட்டுள்ளார்களா என்கிற எனது சந்தேகத்தையும் தெரிவித்திருந்தேன்.

மேலும் நான் ஆணையருக்கு 08.01.2025இல் அளித்த புகாரிலேயே எதிர்பாராமல் தீ விபத்து ஏற்பட்டால் அதை தடுக்க முடியாமல் ஏராளமான உயிர்பலி ஏற்படும் சூழ்நிலையில் ஸ்ரீ குமரன் ஜவுளி கடை உள்ளதை சுட்டி காட்டியதோடு, பார்க்கிங் இல்லாமல் செயல்படுவதால், அதனால் பொதுமக்களுக்கு ஏற்படும் பாதிப்பை விளக்கியதோடு மகாலட்சுமி ஜவுளி கடை பார்க்கிங் வசதி செய்திருக்கும் போது ஸ்ரீ குமரன் ஜவுளி கடைக்கு மட்டும் தனி சட்டமா என்பதையும் சுட்டிகாட்டி இருந்தேன். மேலும் மாண்புமிகு உயர்நீதிமன்றத்திடம் மரியாதையும், பயமும் கொண்டு சட்டப்படி, நியாயப்படி, தர்மப்படி உயர்நீதிமன்றத்தின் வழிகாட்டுதலை பின்பற்றி விதிமுறைகளை முற்றிலும் மீறி பார்க்கிங் வசதி இல்லாமல் செயல்படும் ஸ்ரீ குமரன் ஜவுளி கடை உள்ள கட்டிடத்தை இடித்து அகற்று மாறு பொதுநலன் கருதி கேட்டிருந்தேன்.

மேலும், பொதுமக்களிடம் இருந்து பெறப்படும் புகார் மனு தொடர்பாக பின்பற்ற வேண்டிய நடைமுறைகளை தலைமை செயலாளர் கூறியுள்ளபடி என் புகார் மனு மீது நடவடிக்கை எடுக்குமாறும் தெரிவித்து இது சம்மந்தமாக தலைமை செயலாளர் வெளியிட்ட அறிக்கையின் நாளிதழ் நகலையும் இணைத்தும் ஆணையருக்கு அனுப்பிய புகாரில் தெளிவாக கூறியதோடு, ஒருவேளை துரதிஷ்டவசமாக தலைமை செயலாளர் கூறியுள்ள அறிவுறுத்தல்களை பின்பற்றி என்புகார் மனு மீது நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் மாண்புமிகு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவரிடமும், மாண்புமிகு உயர்நீதிமன்றத்திலும் ஆணையருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்ய நேரிடும் என்பதை 08.01.2025 இல் ஆணையருக்கு அளித்த புகாரிலேயே தெள்ள தெளிவாக குறிப்பிட்டிருந்தேன்.

நான் நகராட்சி ஆணையருக்கு 08.01.2025 இல் அளித்த புகாரில் குறிப்பாக என் புகார் மீது நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் மாண்புமிகு தங்களிடமும், உயர்நீதிமன்றத்திடமும் ஆணையருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்ய நேரிடும் என்று கூறி இருந்தும், ஆணையர் எதைப்பற்றியும் கவலைப்படாமல் விதிமீறிய ஸ்ரீ குமரன் ஜவுளிக்கடை நிர்வாகியிடம் லஞ்சம் பெற்றுதான் விதிமீறிய கட்டிடத்தின் மீது நடவடிக்கை எடுக்காமல் உள்ளாரா என்கிற சந்தேகம் ஏற்படுவதோடு சட்டத்தை மீறுவதை வழக்கமாகவும், வாடிக்கையாகவும் கொண்டு செயல்படுகின்றாரோ என்று நினைக்க தோன்றுகிறது. அல்லது அனைத்து விதமான அதிகார துஷ்பிரயோகங்களுக்கும் தமிழ்நாட்டிலேயே இவர்தான் முன்மாதிரியாக திகழ்கின்றாரோ என்கிற சந்தேகம் எழுகின்றது.

மக்கள் வரிப்பணத்தில் சம்பளம் வாங்கி கொண்டு சட்டவிரோதமாக செயல்படும் துறையூர் நகராட்சி ஆணையர் மீது சட்டப்படி கடும் நடவடிக்கை எடுத்து சட்டத்தை

காப்பாற்றவில்லையென்றால் இதுபோல் ஏராளமான அதிகாரிகள் உருவாகி சட்டத்தை அழித்துவிடும் அபாயம் ஏற்படும் என்பதை தங்களுக்கு சுட்டிகாட்ட விரும்புகின்றேன்.

எனவே உயர்ந்த படிப்பு, படித்து ஒழுக்கத்தின் காரணமாக உயர்ந்த பதவியில் இருக்கும் நேர்மையான மதிப்பிற்கும், மரியாதைக்குரிய மேலான தாங்கள் தவறு செய்த நகராட்சி ஆணையர் மீது கடும் நடவடிக்கை எடுத்து விதி மீறி செயல்படும் ஸ்ரீ குமரன் ஜவுளிக்கடையை இடித்து அகற்றுமாறு பொது நலன் கருதி பணிவோடு, கீழ்ப்படிந்து தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்". என தெரிவித்துள்ளார்.

2. மனுதாரரது புகார் குறித்து துறையூர் நகராட்சி ஆணையரிடம் இம்முறைமன்ற நடுவத்தின் 07.04.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் அறிக்கை கோரப்பட்டது.

துறையூர் நகராட்சி ஆணையர் தனது கடித ந.க.எண்.189/2025/எப்1, நாள் 13.05.2025 –ன் அறிக்கையில் கீழ்க்கண்ட விவரங்களை தெரிவித்துள்ளார். அதில் :-

"விசாரணை மேற்கொண்டதன் அடிப்படையில் திருச்சி சாலையில் இயங்கி வரும் ஸ்ரீ குமரன் சில்க்ஸ் 32 ஆண்டுகளாக செயல்பட்டு வருவதாக தெரியவருகிறது. ஏற்கனவே நிலையில் இருந்த வணிக உபயோக கட்டிடத்தை இடித்து விட்டு, மீண்டும் வணிக உபயோகக் கட்டிடம் 2008 ஆம் ஆண்டு கட்டப்பட்டுள்ளதாக விசாரணையில் தெரிய வருகிறது. தரைத்தளம் மற்றும் இரண்டு தளங்களில் கட்டிடம் கட்டப்பட்டு வளாகம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், கட்டிட விண்ணப்ப எண்.38/2008–2009, நாள் 06.10.2008ல் தரைத்தளம் மற்றும் இரண்டு தளங்களில் கடை மற்றும் குடோன் கட்டிடம் கட்டுவதற்கு கட்டிட அனுமதி பெறப்பட்டுள்ளதாக கட்டிட உரிமையாளர் திரு.வேல்முருகன் ஆவணம் மூலம் தெரிவித்துள்ளார். இது குறித்த ஆவணம் நகராட்சி அலுவலகத்தில் கிடைக்கப் பெறவில்லை.

அதன்பின் கட்டிட விண்ணப்ப எண்.11/2011, நாள் 10.08.2011–ல் தரைத்தளத்தில் கூடுதலாக கடை கட்டுவதற்கு கட்டிட அனுமதி பெறப்பட்டுள்ளது.

மேலும், தரைத்தளம், முதல்தளம் மற்றும் இரண்டாம் தளத்தில் அனுமதி பெறப்பட்டுள்ள வரைபடத்திற்கு மாறுதலாக கட்டிடம் கட்டப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது. அனுமதிக்கு மாறுதலான கட்டிடத்திற்கு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998 (திருத்தப்பட்ட சட்டம் 35/2022) பிரிவு 135 (1)ன் கீழ் அறிவிப்பு சார்பு செய்து நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. அனுமதி பெறப்பட்டுள்ள வரைபடத்தின்படி 1914.0 சதுரடி இடம் வாகனம் நிறுத்துமிடமாக ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்க வேண்டும். ஆனால், வரைபடங்களில் வாகனம் நிறுத்துவதற்குரிய இடவசதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை. இருப்பினும் கட்டிட உரிமையாளர் ஸ்ரீ குமரன் சில்க்ஸ் கடையிலிருந்து 100 அடி தூரத்திற்குள் 2065.0 சதுரடி இடம் வாகனம் நிறுத்துமிடமாக கடந்த இரண்டு ஆண்டுகளாக பயன்படுத்தப்பட்டு வருகிறது. மனுதாரரால் சொத்து வரிவிதிப்பு எண்கள்.087/014/900571, 087/014/900570, 087/014/900969, 087/014/901475 ஆகிய வரிவிதிப்பு எண்களில் சொத்துவரி செலுத்தப்பட்டு வருகிறது. கட்டிடத்தின் முன்புறம் கழிவுநீர் கால்வாய் எதுவும் அமையப்பெறவில்லை இருப்பினும் நெடுஞ்சாலைத்துறை சாலையான திருச்சி சாலையில் ஏதேனும் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதா என்பதற்கு அறிக்கை வட்டாட்சியரிடம் கோரப்பட்டுள்ளது.

அனுமதிக்கு மாறாக கட்டப்பட்டுள்ள வணிக உபயோகக் கட்டிடத்தின் மீது தற்போது தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998, (திருத்தப்பட்ட சட்டம் 35/2022) நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்ற விவரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது". எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

4) மனுதாரரும், எதிர்மனுதாரரான துறையூர் நகராட்சி ஆணையர் மற்றும் 2 ஆம் எதிர்மனுதாரரான திரு.வேல்முருகன் (ஸ்ரீகுமரன் சில்க்ஸ் உரிமையாளர்) ஆகியோரை

10.06.2025அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 02.06.2025 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5) மனுதாரரான திரு. S.அன்பழகன், என்பவர் 10.06.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் தனது வாக்குமூலத்தை கீழ்க்கண்டவாறு அளித்துள்ளார்:-

"துறையூர் திருச்சி சாலையில் இயங்கி வரும் ஸ்ரீ குமரன் டெக்ஸ் மற்றும் ரெடி மேட்ஸ் அமைந்துள்ள கட்டிடம் சுமார் 12000 சதுர அடியில் அரசு கழிவு நீர் கால்வாயில் வாசல்படி வைத்து, கட்டிடத்தின் நான்கு புறமும் போதிய இடைவெளி விடாமலும், வாகனம் நிறுத்துவதற்கென இடவசதி இல்லாமலும் கட்டப்பட்டுள்ளது.

இது குறித்து நகராட்சிக்கும், அரசுக்கும் விதிமீறி கட்டப்பட்டுள்ள ஸ்ரீ குமரன் டெக்ஸ் மற்றும் ரெடிமேட்ஸ் கட்டடத்தை இடித்து அகற்றிட மனு செய்திருந்தேன். கடந்த 10 வருடங்களாக நகராட்சி ஆணையர்களாக இருந்தவர்கள் லஞ்சம் பெற்றுக்கொண்டு என் மனு மீது நடவடிக்கை எடுக்காமல் இருந்து விட்டார்களோ என எண்ணத்தோன்றுகிறது.

அரசுக்கும், மாண்புமிகு முறைமன்ற நடுவத்திற்கும் அளித்த புகார்மீது நகராட்சி ஆணையர் அளித்திருக்கும் அறிக்கையில் உண்மை இருக்காது என நான் கருதுவதால், மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்கள் நேரடியாக கட்டடத்தை ஆய்வு செய்து மாண்புமிகு உயர்நீதிமன்றத்தின் வழிகாட்டுதலை பின்பற்றி விதிமுறைகளை முற்றிலும் மீறி பார்க்கிங் வசதி இல்லாமல் செயல்படும் ஸ்ரீகுமரன் ஜவுளி கடை உள்ள கட்டிடத்தை இடித்து அகற்ற உத்தரவிடுமாறு பொதுமக்கள் நலன் கருதி கேட்டு கொள்கிறேன். மேலும், நடவடிக்கை எடுக்காத நகராட்சி ஆணையர் மீது கடும் நடவடிக்கை எடுக்கவும், விதி மீறி செயல்படும் ஸ்ரீ குமரன் ஜவுளி கடையை இடித்து அகற்றுமாறும் பொதுநலன் கருதி பணிவோடு, தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

எனது புகார் உண்மை என்றால் உரிய நடவடிக்கை எடுக்கவும், எனது புகார் பொய் என கண்டறியப்பட்டால் அதன் மீது பிறப்பிக்கும் உத்தரவினை நான் ஏற்றுக்கொள்ளவும் தயாராக உள்ளேன் என பணிவுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

6) மேலும் மனுதாரர் தனது 10.06.2025 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார். அதில் :–

"திருச்சி மாவட்டம் துறையூரில் விதிமீறி கட்டப்பட்டுள்ள ஸ்ரீகுமரன் ஜவுளிக்கடை கட்டிடத்தை இடித்து அகற்ற வேண்டி பொது நலன் கருதி புகார் கொடுத்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் விதிமீறிய ஸ்ரீகுமரன் ஜவுளிக்கடைக்கு உடந்தையாக செயல்படும் துறையூர் நகராட்சி ஆணையர் மீது நடவடிக்கை எடுத்து விதிமீறிய கட்டிடத்தை இடித்து அகற்ற வேண்டி

மேலும் துறையூர் திருச்சி சாலையில் இயங்கிவரும் ஸ்ரீகுமரன் டெக்ஸ் & ரெடிமேட்ஸ் உள்ள கட்டிடம் சுமார் 12000 சதுர அடியில் அரசு கழிவு நீர் கால்வாயில் மெயின் வாசல் படி வைத்து வாகனம் நிறுத்துவதற்கென்று 1 அங்குலம் கூட பார்க்கிங்கென்று 1 அங்குலம் கூட இடம் ஏதும் விடாமல் Tamil Nadu Combined Development and Building Rules படி கட்டிடத்தின் முன்புறம் 5 மீட்டர் காலி இடம் விடாமல் (Set back) கட்டிடத்தை சுற்றி 4 பக்கமும் 1 அங்குலம் கூட காலி இடம் விடாமல் (Set back)எதிர்பாராதவிதமாக ஏதாவது தீ விபத்து ஏற்பட்டால் அதை தடுத்து அணைக்க முடியாத சூழ்நிலையில் ஸ்ரீகுமரன் கட்டிடம் கட்டப்பட்டுள்ளது.

கடந்த 10 வருடங்களாக விதிமீறிய ஸ்ரீகுமரன் கட்டிடத்தை நகராட்சி ஆணையர் பதவியில் இருந்த ஒருவருமே கவனிக்காததோடு நகராட்சி நிர்வாக இயக்குனரின் அறிவுரைகளையும் பின்பற்றாததோடு கடந்த 10 வருடங்களாக அந்த கட்டிடத்தை ஆய்வு செய்யாமல் இருந்த காரணத்தால் அனைத்து ஆணையர்களுமே விதிமீறிய கட்டிட உரிமையாளரிடம் கையூட்டு

பெற்றுள்ளார்களோ என்கிற எனது சந்தேகத்தை தெரிவித்து, தலைமை செயலாளரின் அறிவுறுத்தலை பின்பற்றி என் புகார் மீது நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் மாண்புமிகு தங்களிடமும், உயர்நீதிமன்றத்திடமும் வழக்கு தாக்கல் செய்ய நேரிடும் என்று நான் எச்சரிக்கை செய்ததையும் ஆணையர் பொருட்படுத்தவில்லை.

எனவே, இத்தகைய சூழ்நிலையில் அதுவும் தலைமை செயலாளர் அறிவுறுத்தல்படி 30 நாட்களுக்குள் என் புகார்மீது ஆணையர் நடவடிக்கை எடுக்காவிட்டால் நான் மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்வேன் என்று கூறியதைகூட அறவே பின்பற்றாத துறையூர் நகராட்சி ஆணையர் கொடுக்கும் வாக்குமூலம், அறிக்கை அனைத்தும் விதிமீறிய ஸ்ரீகுமரன் ஜவுளிக் கடை நிர்வாகியை எப்படியும், எப்பாடுபட்டாவது காப்பாற்றும் நோக்கத்தோடு பொய்யாக இருக்கும்.

எனவே என் புகார்மீது இயற்கையான நேர்மையான நீதி கிடைக்கும் பொருட்டு மாண்புமிகு உயர்நீதிமன்றம் பொதுமக்களின் புகார் மீது கமிசன் அமைத்து உண்மையை கண்டு பிடிப்பது போல மாண்புமிகு தங்களின் நேரடி பார்வையில் கமிசன் அமைத்து விதிமீறிய ஸ்ரீகுமரன் கட்டிடத்தை இடநேராய்வு செய்து நகராட்சியால் அந்த கட்டிடத்திற்கு வழங்கப்பட்ட அனுமதி உத்தரவு, வரைபடம் அனைத்தையும் ஆராய்ந்து நகராட்சி அனுமதி அளித்த உத்தரவில் பார்க்கிங் கென்று எவ்வளவு இடம் ஒதுக்கப்பட்டுள்ளது என்பதையும், கட்டிடத்தை சுற்றி எவ்வளவு காலி இடம் விட்டிருக்க வேண்டும் என்பதை கண்டறிந்து ஸ்ரீகுமரன் ஜவுளிக்கடைகட்டிடம் விதி மீறி கட்டப்பட்டுள்ளது கண்டறியப்பட்டால் உச்சநீதிமன்றம், உயர்நீதிமன்றம் இரண்டின் வழிகாட்டுதலை பின்பற்றி இடித்து அகற்றுமாறும், நான் புகாரில் கூறியது பொய் என்றால் என்மீது எந்த நடவடிக்கை எடுத்தாலும் அதை நான் மனபூர்வமாக ஏற்றுக்கொள்கிறேன் என்பதை பணிவோடு தாழ்மையோடு தெரிவித்து கொள்கிறேன். மேலும் 15.05.2025 அன்று மாண்புமிகு உச்சநீதிமன்ற உத்தரவு ஞபடி அனுமதியற்ற கட்டிடத்தின்மீது நடவடிக்கை எடுக்குமாறு அனைத்து நகராட்சி ஆணையர்களுக்கும் நகராட்சி நிர்வாக இயக்குனர் கடிதம் அனுப்பி உள்ளார்." என தெரிவிக்கப்பட்டுள்ளது.

7) எதிர் மனுதாரரான துறையூர் நகராட்சி ஆணையர் (பொறுப்பு) மற்றும் மேலாளர் மற்றும் நகரமைப்பு ஆய்வாளர் ஆகிய இருவரும் 10.06.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் இம்முறைமன்ற நடுவத்தின் முன்பு நேரடியாக ஆஜராகி தமது வாக்குமூலத்தை கீழ்க்கண்டவாறு பதிவு செய்துள்ளனர்.

"மனுதாரரது புகார் தொடர்பாக திருச்சி சாலையில் செயல்பட்டு வரும் ஸ்ரீ குமரன் டெக்ஸ் மற்றும் ரெடிமேட்ஸ் வணிகக்கட்டிடம் துறையூர் நகராட்சி நகரமைப்பு ஆய்வாளர் அவர்களால் ஆய்வு செய்யப்பட்டு, விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டது.

விசாரணை மேற்கொண்டதனடிப்படையில், மேற்படி ஸ்ரீ குமரன் டெக்ஸ் மற்றும் ரெடிமேட்ஸ் நிறுவனம் 32 ஆண்டுகளாக செயல்பட்டு வருவதும், ஏற்கனவே இருந்த வணிக உபயோக கட்டிடத்தை இடித்து விட்டு மீண்டும் வணிக உபயோகக்கட்டிடம் 2008ம் ஆண்டு கட்டப்பட்டுள்ளது கள ஆய்வில் தெரியவந்தது.

தரைதளம் மற்றும் இரண்டு தளங்களில் கட்டிடம் கட்டப்பட்டு வளாகம் பயன்படுத்தப்பட்டு வருகிறது. தரைதளம் மற்றும் இரண்டு தளங்களில் கடை மற்றும் குடோன் கட்டுவதற்கு கட்டிட அனுமதி பெறப்பட்டுள்ளதாக கட்டிட உரிமையாளர் திரு.வேல்முருகன் ஆவணம் மூலம் தெரிவித்துள்ளார். மேற்படி ஆவணம் நகராட்சி அலுவலகத்தில் கிடைக்கப்பெறவில்லை.

அதன்பின் 10.08.2011–ல் தரை தளத்தில் கூடுதலாக கடை கட்டுவதற்கு அனுமதி பெறப்பட்டுள்ளது.

தரைதளம், முதல் தளம் மற்றும் இரண்டாம் தளத்தில் அனுமதி பெறப்பட்டுள்ள வரைபடத்திற்கு மாறுதலாக கட்டிடம் கட்டப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருவதால், அனுமதிக்கு மாறுதலான கட்டிடத்திற்கு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998,

(திருத்தப்பட்ட சட்டம் 35/2022) பிரிவு 135 (1)ன் கீழ் அறிவிப்பு சார்பு செய்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

கட்டிடத்தின் முன்பாக கழிவுநீர் கால்வாய் எதுவும் இல்லை. வரைபடங்களில் வாகனம் நிறுத்துவதற்குரிய இடவசதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை. எனினும் கட்டிட உரிமையாளர் ஸ்ரீகுமரன் சில்க்ஸ் அவர்களின் கடையிலிருந்து 100 அடி தூரத்தில் 2065.0 சதுர அடியில் வாகனம் நிறுத்தும் இடமாக ஒதுக்கீடு செய்து கடந்த 2 ஆண்டுகளாக பயன்படுத்தப்பட்டு வருகிறது என்கிற விவரம் இம்முறைமன்ற நடுவத்தில் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது."

8) இரண்டாவது எதிர்மனுதாரரான ஸ்ரீகுமரன் சில்க்ஸ் உரிமையாளர் திரு. சு.வேல்முருகன் என்பவர் 10.06.2025 அன்று நடைபெற்ற விசாரணையின் போது நேரடியாக ஆஜராகி தனது வாக்குமூலத்தை இம்முறைமன்றத்தில் கீழ்க்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

"மனுதாரர் திரு.S.அன்பழகன் என்பவரது புகார் தொடர்பாக எங்களிடம் துறையூர் நகராட்சியினர் விசாரணைகள் மேற்கொண்டனர்.

எங்களது வணிக பயன்பாட்டு கட்டிடத்திற்கு முன்பாக கழிவுநீர் கால்வாய் என்று எதுவும் இல்லை. எனவே, மனுதாரர் கால்வாய் மீது வாசல்படி வைத்து கட்டிடம் கட்டப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளது முற்றிலும் தவறானது. பார்க்கிங் வசதி 100 அடி தூரத்தில் 2065.0 சதுர அடி இடத்தில் ஏற்படுத்தப்பட்டு கடந்த 2 ஆண்டுகளாக பயன்பாட்டில் உள்ளது. மேலும் Set back வசதி பின்புறம் 10 அடியும், முன்புறம் 5 அடியும் விடப்பட்டுள்ளது. பக்கவாட்டில் சிறிது இடம் விடப்பட்டுள்ளது என்பதை இம்முறைமன்ற நடுவத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்."

9) மேலும், 2 ஆம் எதிர்மனுதாரரான ஸ்ரீகுமரன் சில்க்ஸ் உரிமையாளர் திரு.சு.வேல்முருகன் என்பவர் சமர்பித்த 10.06.2025 நாளிட்ட தனது கடிதத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்" . அதில் –

"நான் மேற்கண்ட முகவரியில் ஸ்ரீகுமரன் டெக்ஸ் என்ற ஜவுளி கடையை கடந்த 32 ஆண்டுகளுக்கு மேலாக மக்களின் நன்மதிப்பை பெற்று தொழில் செய்து வருகிறேன். தமிழக அரசின் நல் ஆதரவோடு, நகராட்சி நிர்வாக ஒத்துழைப்போடு, நகராட்சிக்கு செலுத்த வேண்டிய வரியினங்கள் அனைத்தையும் முழுமையாக, முறையாக குறித்த காலத்தில் செலுத்தி நகராட்சி நிர்வாகத்திற்கு இணக்கமாக தொழில் செய்து வருகிறேன்.

முறையீட்டு மனுதாரர் திரு.S.அன்பழகன் என்பவர் அளித்துள்ள புகார்களுக்கு எழுத்து பூர்வமாக தங்களிடத்தில் நேரில் ஆஜராகி இந்த பதில் மனுவை தாக்கல் செய்கிறேன்.

1) நகராட்சி மழைநீர் வடிகாலை ஆக்கிரமித்து கடை (கட்டிடம்) அமைத்துள்ளதாக கூறிய புகார் முற்றிலும் பொய்யானது, உண்மைக்கு மாறானதாகும், மனுதாரர் குறிப்பிட்ட இடத்தில் மழைநீர் வடிகால் அமைக்கப்படவே இல்லை. இவ்வாறு இருக்க மனுதாரர், வேண்டுமென்றே புகாரை மாண்புமிகு முறைமன்ற நடுவர் சமூகத்திற்கு அளித்துள்ளார்.

2) எனது ஜவுளி நிறுவனத்திற்கு அருகாமையில் சுமார் 100 அடிக்குள்ளாகவே வாகன நிறுத்துமிடம் அமைத்து, விதிமுறையை பின்பற்றி தொழில் நடத்தி வருகின்றேன். அதற்கான புகைப்பட ஆவண நகலையும் இணைத்துள்ளேன். மேலும் பொதுமக்கள், கடைக்கு வரும் வாடிக்கையாளர்கள் அறியும் வகையில் பார்க்கிங் வசதி செய்யப்பட்டுள்ள இடத்தை அறிந்து கொள்ளும் வகையில் விளம்பரம் செய்யப்பட்டு விளம்பர பலகை அமைக்கப்பட்டுள்ளதையும் புகைப்பட ஆவணமாக இணைத்து உள்ளேன். ஆகவே முறையீட்டு மனுதாரர் கொடுத்த 2வது புகாரும் வேண்டுமென்றே, காழ்ப்புணர்ச்சியோடு உண்மைக்கு மாறாக, பொய்யான புகாரை அளித்துள்ளார் என்பது தெளிவாகிறது.

3) ஜவுளி நிறுவனத்தின் கட்டிடம், முறையாக அனுமதி பெற்றே கட்டப்பட்டுள்ளது, பணியாளர்கள் மதிய வேளையில் அமர்ந்து உணவு அருந்துவதற்காக மேல்மாடியில் தற்காலிக கொட்டகை அமைக்கப்பட்டுள்ளது. மேலும், கட்டிடத்தின் முன்புறம் 5 அடியும், கட்டிடத்தின் தென்புறம் நகராட்சி கிழமேல் 23 அடி அகல சாலையின் வடபுறம், ஜவுளி நிறுவனத்தின் தென்புறம் சுமார் 10 அடி அகலத்தில் காலியிடம் அமையப்பெற்றுள்ளது. ஆகவே முறையீட்டு மனுதாரர் திரு. அன்பழகன் அவர்கள் சொன்ன குற்றச்சாட்டுகள், புகார்கள் அனைத்தும் உண்மைக்கு மாறானதும், முழுக்க முழுக்க பொய்யானதும் ஆகும் என்பதை மாண்புமிகு முறைமன்ற நடுவர் அய்யா அவர்கள் பார்வைக்கும், கவனத்திற்கும் கொண்டு வருவதற்கு கடமைபட்டவன் என்ற முறையில் மிகுந்த பணிவுடன் பதிலுரையாக சமர்ப்பிக்கின்றேன்". எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

10) மனுதாரரின் புகார் மனு, இணைத்தனுப்பப்பட்ட ஆவணங்கள், வாக்குமூலம், துறையூர் நகராட்சி ஆணையரின் அறிக்கை, மேலாளர் நகராட்சி ஆணையர் (பொ) மற்றும் நகராட்சி நகரமைப்பு ஆய்வாளர் ஆகியோரின் வாக்குமூலம், 2ஆம் எதிர்மனுதாரரான ஸ்ரீ குமரன் சில்க்ஸ் உரிமையாளரின் வாக்குமூலம், பதில் மனு மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் அனைத்தும் இம்முறைமன்ற நடுவத்தினால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:-

மனுதாரர், துறையூர் திருச்சி சாலையில் இயங்கி வரும் ஸ்ரீ குமரன் சில்க்ஸ் ஜவுளிக்கடை கட்டிடம் அரசு கழிவுநீர் கால்வாயில் வாசல்படி வைத்து, பார்க்கிங்கென்று 1 அங்குலம் கூட இடம் விடாமல், சுமார் 12,000 சதுர அடியில், கட்டிடத்தை சுற்றி நான்குபுறமும் இடம் விடாமல், எதிர்பாராதவிதமாக தீ விபத்து ஏற்பட்டால் அதை தடுத்து அணைக்க முடியாத சூழ்நிலையில் கட்டப்பட்டு இயங்கி வருகிறது என்றும், இவை அனைத்தும் தெரிந்தே துறையூர் நகராட்சி ஆணையர் ஏதும் நடவடிக்கை மேற்கொள்ளவில்லை என தெரிவித்து மேற்படி ஜவுளிக்கடை நிறுவனத்தை பொதுமக்கள் நலன் கருதி இடித்து அகற்றுமாறும், நடவடிக்கை எடுக்காத துறையூர் நகராட்சி ஆணையர் மீது நடவடிக்கை எடுக்க இம்முறைமன்ற நடுவத்தை நாடியுள்ளார்.

மேற்படி புகார் மீது விசாரணை மேற்கொண்டதன் அடிப்படையில் திருச்சி சாலையில் இயங்கி வரும் ஸ்ரீ குமரன் சில்க்ஸ் 32 ஆண்டுகளாக செயல்பட்டு வருவதும், ஏற்கனவே நிலையில் இருந்த வணிக உபயோக கட்டிடத்தை இடித்து விட்டு மீண்டும் வணிக உபயோகக் கட்டிடம் 2008 ஆம் ஆண்டு கட்டப்பட்டுள்ளதும், தரைத்தளம் மற்றும் இரண்டு தளங்களில் கட்டிடம் கட்டப்பட்டு வளாகம் செயல்பட்டு வருவதும், கட்டிட விண்ணப்ப எண்.38/2008–2009 நாள்.06.10.2008–ல் தரைத்தளம் மற்றும் இரண்டு தளங்களில் கடை மற்றும் குடோன் கட்டிடம் கட்டுவதற்கு கட்டிட அனுமதி பெறப்பட்டுள்ளதாக கட்டிட உரிமையாளர் தெரிவித்து, இது குறித்த ஆவணம் நகராட்சி அலுவலகத்தில் இல்லை என்பதும், மேற்படி கட்டிடத்திற்கு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998, (திருத்தப்பட்ட சட்டம் 35/2022) பிரிவு 135(1)ன் கீழ் அறிவிப்பு சார்பு செய்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதும், ஆணையரின் அறிக்கையின் மூலம் அறிய முடிகிறது.

மேலும் கட்டிடத்தின் முன்பாக கழிவுநீர் கால்வாய் எதுவும் இல்லை என்பதும், வரைபடங்களில் வாகனம் நிறுத்துவதற்குரிய இடவசதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை என்பதும், கட்டிட உரிமையாளர் ஸ்ரீ குமரன் சில்க்ஸ் அவர்கள் கடையிலிருந்து 100 அடி தூரத்தில் 2065.0 சதுர அடியில் வாகனம் நிறுத்தும் இடமாக ஒதுக்கீடு செய்து கடந்த 2 ஆண்டுகளாக பயன்படுத்தப்பட்டு வருவதும், நகராட்சி ஆணையர் மற்றும் நகரமைப்பு ஆய்வரின் வாக்குமூலத்திலிருந்து தெரிய வருகிறது.

தங்களது வணிக பயன்பாட்டு கட்டிடத்திற்கு முன்பாக கழிவுநீர் கால்வாய் எதுவும் இல்லை எனவும், மனுதாரர் கால்வாய் மீது வாசல்படி வைத்து கட்டிடம் கட்டப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளது என்பது முற்றிலும் தவறானது எனவும், பார்க்கிங் வசதி 100 அடிதூரத்தில் 2065.0 சதுர அடி இடத்தில் ஏற்படுத்தப்பட்டு கடந்த 2 ஆண்டுகளாக பயன்பாட்டில் உள்ளதும்,

மேலும் set back வசதி கட்டிடத்தின்பின்புறம் 10 அடியும், முன்புறம் 5 அடியும், பக்கவாட்டில் சிறிது இடமும் விடப்பட்டுள்ளது என்பதும் 2ஆம் எதிர்மனுதாரரின் வாக்குமூலத்திலிருந்து அறிய முடிகிறது.

இந்நேர்வில், துறையூர் திருச்சி சாலையில் இயங்கி வரும் ஸ்ரீ குமரன் டெக்ஸ் & ரெடிமேட்ஸ் கட்டடம் அனுமதி பெற்றுள்ள வரைபடத்திற்கு மாறுதலாக கட்டப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998–ன் படியும், மாண்பமை உயர்நீதிமன்ற அறிவுறுத்தல்களின்படியும் நடவடிக்கைகளைத் தொடர்ந்திட துறையூர் நகராட்சி ஆணையரை அறிவுறுத்தலாம் என முடிவு செய்து அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது. மேலும், இதுவரை உரியநடவடிக்கை எடுக்காத நகராட்சி ஆணையர்கள் மீது தக்க துறை நடவடிக்கை எடுக்க பரிந்துரை செய்யப்படுகின்றது.

2025–ஆம் ஆண்டு, ஆகஸ்டு திங்கள் 04–ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு.S.அன்பழகன், 155, அசோக் நகர்,
முசிறி மெயின் ரோடு, துறையூர் (அஞ்சல் வட்டம்),
திருச்சிராபள்ளி மாவட்டம் – 621 010

2) நகராட்சி ஆணையர்,
துறையூர் நகராட்சி, திருச்சிராபள்ளி மாவட்டம்.

3) திரு.சு.வேல்முருகன்,
த/பெ.திரு.சுப்பையா பிள்ளை,
32, திருச்சி ரோடு, துறையூர், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

4) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

5) ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்

இ.கோ/உதிரி

//ஆணைப்படி / அனுப்பப்படுகிறது//

செயலாளர்.

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
வாய்மையே வெல்லும்
சென்னை–600 032